செய்தி வெளியீடு எண்: 978 நாள்: 06.11.2010.

# புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கை! தமிழக அரசு அறிவிப்பு!

சென்னை வானிலை ஆராய்ச்சி நிலையம், இன்று காலை நிலவரப்படி, வங்கக் கடலில் சென்னைக்கு அருகில் 800 கிலோமீட்டர் தொலைவில் "ஜல்" எனப் பெயரிடப்பட்டுள்ள புயல் மையம் கொண்டிருப்பதாகவும்; அப்புயல் தமிழகத்திற்கும், ஆந்திராவில் உள்ள ஓங்கோலுக்கும் இடையில் கரையைக் கடக்கக்கூடும் என்றும்; அதன் காரணமாக, தமிழகத்தில் அதிவேகமான காற்றுடன் கூடிய பெருமழை பெய்யக்கூடும் என்றும்; மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல வேண்டாமென்றும் அறிவித்துள்ளது. இதனையொட்டி தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

* * *